துங்கபுரம் சிறுநில விவசாயச் சங்கத் தலைவரிடம் இருந்து ஒரு மனுவும் வரவில்லை என்று வருவாய் வாரியம் (உணவு உற்பத்தி), மற்றும் வேளாண்மை இயக்குநர் சொல்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட மனுவின் நகல் ஒன்றை அனுப்பித்தர ஏற்பாடு செய்தால் அதனை அரசு பரிசிலனை செய்யும்.

பலாப்பழம் ஏற்றுமதி

*585. **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

பலாச்சுளையைப் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

அரசு எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை

*586. **வினு—திரு. கே. ஏ; வகாப் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் மவுண்ட் ரோட் அரசாங்க எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது லாபத்தில் செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) சென்னை அண்ணா சாலை (மவுண்ட் ரோட்) அரசாங்க எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை ஒன்று 1968-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) விவசாயத்திற்கு ஏற்ற நீர் இவ்விடத்தில் கிடைப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாக 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் இக் காய்கறிப் பண்ணை மூடப்பட்டது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அப்படி அமைக்கப்பட்ட அந்தக் காய்கறிப் பண்ணையில் ஸ்ப்ரிங் மூலம் நீர் பாய்ச்சும் முறை கையாளப்பட்டதே, ஆராய்ச்சி மூலம் அந்த முறையாவது பயனுடையதாகக் கருதப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பண்ணையில் நீர் இறைக்க ஸ்ப்ரிங்கிளிங் முறை கையாளப்பட்டது. ஸ்ப்ரிங்கிங் முறைதான் வெற்றி பெற்றது. பண்ணை வெற்றி பெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்ன்மெண்டு எஸ்டேட்டுக்குள் ஒரு காய்கறிக்கடை இருக்கிறது. அங்கே வாடி வதங்கிப்போன காய்கறிகள்தான் இருக்கின்றன. இப்படி ஒரு கடை அங்கே

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழில் எழுத வேண்டுமென்கிற நிலை வரும்போது, தமிழர்களே முன்வந்து, எழுதிக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

சென்னை—திருச்சிராப்பள்ளி விரைவுப் பேருந்துகள்

***591 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து திருச்சிக்கு, இடையில் நிற்காத விரைவுப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை

சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவில்

***592 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நடராஜர் கோவில் இந்து அறநிலையப் போர்டின் கட்டுப்பாட்டில் உள்ளதா ?

(இ) இல்லை என்றல், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) ஆலயத்திற்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது நீங்கலாக மற்றவை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சிற்றூர் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள்

***593 வினு—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சிற்றூர் கோவில்களில் உள்ள மானிய நிலங்கள் அனைத்தையும் அறநிலைய இலாக்கா மூலம் கண்காணிப்பதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தனி ரெவின்யூ இலாகா அதிகாரிகளை நியமித்து அறநிலைய இலாகாவின்கீழ் இல்லாத கோயில்களையும் அவற்றின் நிலங்களையும் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் கொடுக்கும் அறிக்கையின் மேல் விசாரணை செய்து கோயில்கள் இலாகாவின்கீழ் எடுக்கப்பட்டு வருகின்றன.